1972 சனவரி 31]

இயங்கும் நூலகங்கள்.

* 162. வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாவட்டந்தோறும் நடமாடும் நூலகங்களை நிறுவுகிற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தமிழ் நாட்டில் இயங்கிவரும் நூலக ஆணைக்குழுக்கள், சில நடமாடும் நூலகங்களை நடத்தி வருகின்றன. ஆனால் மாவட்டந்தோறும் நடமாடும் நூலகங்கள் நிறுவ, செயற்குறிப்பு எதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

* 163 Q —DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that a number of Mobile Libraries in Coimbatore district have been closed; and

(b) if so, the reasons therefor?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) ஏப்ரல் 1970-லிருந்து ஆகஸ்ட் 1970 வரை 11 இயங்கு நூலகங்கள் இயங்கி வந்தன. இவைகளில் 5 இயங்கு நூலகங்கள் செப்டம்பர் 1970-லிருந்து இன்றளவும் இயங்கி வருகின்றன. 6 இயங்கு வாகனங்கள் அடிக்கடி சீர்கேடு அடைந்ததால் அவை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்று மாவட்ட நூலக ஆணைக் குழுச் செயலர் அறிவித்துள்ளார். பழுது பார்க்கும் செலவு அதிகரித்தமையால் பற்றுக் குறையுடன் இயங்கி வரும் நூலக ஆணைக் குழுவுக்கு இதன் மேல் மேன்மேலும் செலவு செய்ய இயலவில்லை. இருந்தபோதிலும், அதிகமான இடங்களுக்குச் சென்று இருக்கும் இயங்கு நூலகங்கள் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்து, இயங்கு நூலக இயக்கத்தின் பயனை விரிவு செய்ய, நூலக ஆணைக் குழு ஆவன செய்யும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், மாவட்டந்தோறும் இருக்கிற 'மொபைல் லைப்ரரி' வான்கள் ரிப்பேர் அடைவதால் அந்தத் திட்டம் சரியாக நடைபெறவில்லை. எனவே வான்கள் ரிப்பேர் ஆகாமல் அல்லது ரிப்பேர் ஆன வான்களை உடனடியாகப் பழுதுபார்க்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வேறு எந்த மாவட்டத்திலும் இல்லாத அளவுக்கு கோவை மாவட்டத்தில் பதினொரு இயங்கு நிறுவனங்கள் வைத்திருக்கிறார்கள். அதில் ஐந்து இப்போது பணியாற்றி வருகின்றன, நிதிப் பற்றுக்குறை காரணமாக மீதமுள்ள ஆறு இயங்கு நிறுவனங்கள்—பழுதடைந்தவை—பழுதுபார்க்க முடியாததால் செயலற்று உள்ளன. விரைவிலே அவைகளை, நிதிவசதி ஏற்பட்டவுடன் செயல்படச் செய்தால் நிலைமை சீர்பட்டு விடும். இப்போது மதுரை, சென்னை, கோவை முதலிய இடங்களில் இயங்கு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. மற்ற மாவட்டங்களிலும் ஒரு இயங்கு கிளை நூலகம் ஏற்படுத்துகின்றவகையில் நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது. அது, சம்பந்தப்பட்ட மாவட்ட நூலக ஆணைக் குழுவுடன் தொடர்பு கொண்டு முடிவு செய்யப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த இயங்கும் நூலகங்களுக்கு அதிகமாக உதவி செய்து வந்தால், அவை நல்லமுறையில் இயங்கி வரும். இப்படிச் செயலற்று முடங்கிக் கிடக்கும் இயங்கு நூலகங்களை அதனால் பழுது பார்க்கப்பட்டு, இப்போதுள்ள குறைகள் போக்கப்படும். அதற்கு அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இயங்கு நூலகங்கள் இயங்காமல் இருப்பதற்கு நிதிப் பற்றுக்குறைதான் காரணம் என்று சொல்லப்படுகிறது. போதிய நிதி வசதி ஏற்பட்டால் இந்தக் குறைகள் போக்கப்பட்டுவிடும். நிதி வசதியைப் பெருக்குவதற்காக இப்போது வசூலிக்கப்பட்டு வருகின்ற மூன்று காசு செஸ் நிதியை ஐந்து காசாக உயர்த்தியுள்ளார்கள். நிதி வசதி பெருகியவுடன் குறைகள் தவிர்க்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதிய உணவுத் திட்டம்

*164. வினா—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில், மதிய உணவுத் திட்டம் யாருடைய மேற்பார்வையில் தற்போது நடைபெறுகிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மதிய உணவு வழங்கு திட்டத்தில் உள்ள ஒரு மைய நிலையத்தின் நிருவாகம், உள்ளூர் நன்கொடையாளர்களால் அமைக்கப்படும் 'பொதுக் குழு', 'நிருவாகக் குழு' என்ற இரு குழுக்களினால் நடத்தப்படுகிறது. அந்நிருவாகம் கல்வித் துறை அலுவலர்களின் மேற்பார்வைக்கு உட்பட்டது.

திரு. வி. கே. இராஜாப்பிள்ளை : தலைவரவர்களே, மதிய உணவுத் திட்டத்திற்காக ஊராட்சி மன்றங்கள் இரண்டு காசு வீதம் கொடுத்து வருவதாகச் சொல்லப்படுகிறது. நடைமுறையில், எந்த ஊராட்சியைச் சேர்ந்த குழந்தைகள் படிக்கிறார்களோ, அந்த ஊராட்சியே அந்த இரண்டு காசு வீதத்தை—அந்தப் பங்குத் தொகையை கொடுக்கவேண்டுமென்று அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இத்திட்டத்திற்காக ஊராட்சி மன்றங்கள் 2 காசு, பொதுமக்கள் 2 காசு, அரசாங்கம் 6 காசு என்ற வீதத்தில் செலவு செய்யப்படுகிறது. எந்த எல்லையில் அந்தப் பள்ளி இருக்கிறதோ அந்தப் பகுதி மக்களும், ஊராட்சிகளும் செலவை ஏற்றுக்கொள்ளவேண்டும். ஊராட்சித் தலைவர்கள் ஆங்காங்குள்ள பொதுக் குழுவில் அங்கம் வகிக்கிறார்கள். பொதுக் குழுவும், நிர்வாகக் குழுவும் கல்வித் துறை அலுவலர்களின் மேற்பார்வையில் இத்திட்டத்தை நல்லமுறையில் செயல்படுத்தி வருகின்றன.

திரு. சோ. அழகர்சாமி : இப்போது இந்த மதிய உணவுத் திட்டம் செயல்பட அரசாங்கம் 6 காசு, பொதுமக்கள் 2 காசு, ஊராட்சி மன்றங்கள் 2 காசு என்ற வீதத்தில் கொடுத்து வருவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் பல இடங்களில் பொதுமக்களிடம் இருந்து 2 காசு வீதம் வாங்கமுடியாத நிலை இருக்கிறது. அப்படி இருந்தாலும் ஊராட்சி மன்றங்கள் வாங்கியதாகக் கணக்கு காட்டுகிறார்கள். ஆகவே அதற்கு மாறாக அரசாங்கம் 8 காசு, ஊராட்சிகள்